நல்லூர் ... நூலகம்
... யாழ்ப்பாணம்


# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா 5.00

முரசு 06 ஒலி 82 பிரசோற்பத்தி மாசி 05 (17 • 02 • 1992) திங்கள்


★ பி. பி. ஸி தகவல்

## ராணுவ தாக்குதல் தோற்றால் அரசின் ஆதரவு குறையும்

யாழ் குடாநாட்டில் ஊரடங்குச் சட்டத்தை அமுல்ப்படுத்தி பாரியதாக்குதலை படையினர் மேற்கொள்ள நினைப்பது பூனை எலியைப் பிடிக்க பதுங்கியிருப்பதற்கு சமன் என்று சிங்கள பி. பி ஸி தெரிவித்தது இவ்வாறு இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு அதில் அரசு தோல்வி காணுமானால் தென்பகுதியில் அரசுக்கு ஆதரவு குறைந்து விடும் எனவும் பி.பி. ஸி தெரிவித்தது.

### லெப். ஈழமணி வீரச்சாவு

மட்டக்களப்பில் பவள் கவசவாகனங்கள் மீதான தாக்குதலின் போது காயமடைந்த லெப். ஈழமணி (மு. மனோகரன், களுவாஞ்சிக்குடி) வீரச்சாவு அடைந்துள்ளார்.

அம்பாறையில் குடுமியாமலை பகுதியில் பதுங்கியிருந்த படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் கடந்த வியாழன் கடும் மோதல் இடம்பெற்றது. மோதலை தொடர்ந்து படையினர் முகாமிற்கு பின்வாங்கினர். இச் சம்பவத்தின் போது அகிலன் (ந. இந்திரன், செங்கலடி) வீரச்சாவு எய்தினார்.

★ கன்னாதிட்டியில் கடைகள் சேதம்

★ பொதுமக்கள் ஆஸ்பத்திரியில் தஞ்சம்

## அதிகாலை யாழ்நகரை நோக்கி படையினர் கடும் ஷெல் தாக்குதல்

நேற்று அதிகாலை 3 30 மணிமுதல் காலை 6 மணிவரை யாழ் குடாநாட்டின் கரையோரப்பகுதிகளை நோக்கி கடும் ஷெல் தாக்குதலை படையினர் மேற்கொண்டனர் மண்டைதீவு, பூநகரி, கல்முனை பகுதியிலிருந்து படையினர் கடும் ஷெல் தாக்குதலை மேற்கொண்ட சமயம் காரைநகர், ஊர்காவற்றுறை இராணுவ முகாம்களிலிருந்து படையினர் கடும் ஷெல் தாக்குதலை நடத்தினர் சில ஷெல்கள் யாழ்நகரப் பகுதியிலும் பாரிய சத்தத்துடன் வீழ்ந்து வெடித்தன — 04 ஆம் பக்கம் பார்க்க

### ஒரு வாரத்தில் 4 பேர் பலி

குடாநாட்டில் கடந்த ஒரு வாரத்தில் நான்கு பேர் வீதி விபத்தில் உயிரிழந்ததாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

வீதி விபத்தினால் பலர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (07)

### அகதி முகாமுக்கு மாற்றம்

ஆவரங்கால் மகாஜன வித்தியாலயத்தில் தங்கியிருந்த அகதிகள் நேற்று முன்தினம் ஊரெழு அகதிமுகாம் கொட்டகைக்கு மாற்றப்பட்டனர். (06)

# கொழும்பில் தேடுதல் ஆரம்பம்

# புலிகள் அணி நுழைந்துள்ளதாம்

## மட்டக்களப்புப் பிரிவு ஏற்கனவே வந்துவிட்டதாக பாதுகாப்பு அமைச்சு தகவல்

விடுதலைப்புலிகளின் நடமாடும் தாக்குதல் அணியொன்று (Hit Squad) கொழும்பினுள் நுழைந்துள்ளதாக கிடைத்த தகவல் ஒன்றை தொடர்ந்து கொழும்பிலும் அதை சுற்றியுள்ள பகுதிகளிலும் நேற்று முதல் கடும் தேடுதல் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.

இத்தாக்குதல் அணி கொழும்பில் முக்கிய இலக்குகளை தாக்கி அழிக்கவும், முக்கிய நபர்களை கொல்லவும் திட்டமிட்டுள்ளதென புலனாய்வு அறிக்கைகள் கிடைத்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது.

இத்தாக்குதல்களை புலிகளின் புலனாய்வுப் பிரிவின் தலைவர் பொட்டம்மானே திட்டமிட்டுள்ளதாகவும் வவுனியாவில் கைதான ஒருவர் மூலமே இத்தகவல்கள் பெறப்பட்டதாகவும் நேற்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கொழும்பில் தாக்குதல் நடத்துவதற்கென — 04 ஆம் பக்கம் பார்க்க

### ஐ. எம் எப். பிரதிநிதிகள் கொழும்பு வந்துள்ளனர்

சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) பிரதிநிதிகள் கொழும்பு வந்துள்ளனர்.

அண்மையில் பாரிஸில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் வழங்கிய நிதியுதவியை அரசு எவ்வாறு பயன்படுத்தவுள்ளது என்பதை அறிந்துகொள்ளவே இவர்கள் இங்கு வந்துள்ளனர்.

இந்த நிதியுதவியைப் பயன்படுத்துவது சம்பந்தமான திட்ட அறிக்கைகள் எதுவும் ஸ்ரீலங்கா அரசினால் இது ...04 ஆம் பக்கம் பார்க்க

### படைத் தலைமையகங்களும் தாக்குதலுக்குள்ளாகலாம்

கொழும்பில் உள்ள படைத் தலைமையகங்கள் மீதும் தாக்குதல் நடாத்தப்படலாம் என தகவல்கள் கிடைத்துள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்தது கடந்த ஆண்டு கூட்டுப் படைத் தலைமையகம் மீது நடாத்தப்பட்ட தாக்குதல் போலவே இவையும் இடம்பெறலாம் என்பதால் படையினர் உஷார் படுத்தப்பட்டுள்ளனர்.

## படையினரின் படகுகள் மீது புலிகள் கடும் தாக்குதல்

நேற்று அதிகாலை யாழ் நகரின் கரையோரப்பகுதிகளை நோக்கி படையினர் கடும் ஷெல் தாக்குதல் நடத்திக்கொண்டிருந்தவேளை மண்டைதீவுக் கடலில் படையினரின் சில பிளாஸ்ரிக் படகுகளும் நடமாடியதாக தெரிவிக்கப்படுகிறது.

கரைக்கு வரமுயன்ற படையினரின் படகுகள் மீது விடுதலைப்புலிகள் கடும் தாக்குதலை நடத்தியதைத் தொடர்ந்து அவை திரும்பி விட்டன. (15)

### இந்திய தூதரகத்திற்கும் பலத்த பாதுகாப்பு

கொழும்பில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலைமையைத் தொடர்ந்து இந்திய தூதரகத்துக்கும் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

தூதுவர் என். என். ஜா வுக்கு மட்டும் எண்பது பேர் விஷேடமாக பாதுகாப்பு வழங்க நியமிக்கப்பட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேபோல அங்குள்ள ஊழியர்களுக்கும் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

## வடக்கிற்கு இந்தியப்படை வராது வதந்திகளை மறுக்கிறார் பிரட்மன்

இலங்கையின் வடபகுதிக்கு இந்தியா 1500 பேர் கொண்ட அதிரடிப்படை ஒன்றை அனுப்பலாம் என்று வெளியான பத்திரிகைச் செய்திகள் தவறானவை என ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

இந்திய உளவு நிறுவனத்தின் நடவடிக்கைகள் வடபகுதியில் இருக்கலாம் என்ற செய்தியையும் மறுத்த பிரட்மன், இந்திய புலனாய்வுக் குழுவினர் கொழும்பில் மேற்கொண்ட சில விசாரணைகளுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்கினோம் அவ்வளவே என்றார்.

சர்வதேச நடைமுறை சட்டவிதிகளுக்கமையவே ஸ்ரீலங்கா அரசு நடந்துகொள்ளும் எனவும் பிரட்மன் மேலும் தெரிவித்தார் 22

### திருமலையில் சுற்றிவளைப்பு மூவர்கொலை; சொத்துக்கள் சேதம்

திருகோணமலையில் சில கிராமங்களை சுற்றிவளைத்த படையினர் அங்கு 3 பொதுமக்களைச்சுட்டுக்கொன்றுள்ளதாகவும், 10பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சுற்றிவளைப்பின் போது படையினர் இக்கிராமங்களில் 20 தமிழ் மக்களின் வீடுகளையும் இரு மீன்பிடி வாடிகளையும் சேதமாக்கினர் இவற்றின் பெறுமதி இரண்டு லட்சம் —04 ஆம் பக்கம் பார்க்க

### ராஜீவ் கொலை விசாரணை புதிய திருப்பம்

## வாக்கு மூலங்கள் சித்திரவதை மூலம் பெறப்பட்டது என சந்தேகநபர்கள் மனு!

ராஜீவ் காந்தி கொலை வழக்குத் தொடர்பாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்கள் தாம் சித்திரவதைக்குட்படுத்த[illegible] அதிகாரிகள் குழம்பி ...போ ...யட்டே வாக்கு மூலங்கள் பெறப்பட்டதாக தற்போது சமர்ப்பித்துவரும் மனுக்களினால் இந்திய புலனாய்வு ...யுள்ளதாக சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன

சந்தே[illegible]ளில் ஒருவரான [illegible]த் தொடர் [illegible]ம் பார்க்க

## இமல்டா மீதான வழக்கில் மணிலா நீதிபதி எச்சரிக்கை

மணிலா நீதிபதி ''கொறனா சோமேறா, குறிப்பிட்ட தினத்தில் நீதி மன்றத்திற்கு சமூகமளிக்காத முன்னை நாள் பிலிப்பையின்ஸ் ஜனாதிபதி மார்கோசின் மனைவி இமல்டா மார்க்கோஸ், அதற்குரிய சரியான காரணத்தை எழுத்து மூலம் இருவாரங்களுகுள் சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில், அவற்றிற்கு வழங்கப்பட்டிருக்கும் பிணையை ரத்து செய்து தண்டனையும் வழங்கப்போவதாக எச்சரித்துள்ளார்

இமல்டாவின் வழக்கறிஞர் தமது கட்சிக்காரருக்கு எதிராக சுமத்தப்பட்டிருக்கும், குற்றங்களை விசாரிப்பதற்கு முன்பதாக இவ்வழக்குத் தொடர்பாக தாம் எழுப்பிய பூர்வாங்க ஆட்சேபனைக்கு கோடு பதில் அளிக்காததினாலேயே இமல்டா கோட்டிற்கு சமூகமளிக்கவில்லை என்று கூறிய கூற்றை நீதிபதி ஏற்க மறுத்துவிட்டார்.

அரசாங்கப் பணம் 5 பில்லியன் டொலர்களை இவரின் கணவர் 20 வருட காலம் ஆட்சியில் இருந்த பொழுது சூறையாடியுள்ளார். அதற்கு இவரும் உடந்தைதாக இருந்தார் என்ற குற்றச் சாட்டு உள்பட 54 குற்றச்சாட்டுகளை எதிர்நோக்கும் 64 வயதான இவர் இவைகள் யாவும் அரசியல் பழிவாங்கலுக்காக சோடிக்கப்பட்டவை என்று கூறுவதுடன் எதிர் வரும் மே மாதம் 11-ம் திகதி பிலிப்பையின்ஸில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலிலும் போட்டியிடுவதற்கான ஆயத்தங்களை செய்து வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (16)

## சில யோசனைகள் புலிகளால் நிராகரிப்பு - தொண்டமான்

### கொழும்பு நாளிதழ் கூறுகிறது

இனப்பிரச்சினைத் தொடர்பாக தான் தெரிவித்த சில யோசனைகளை விடுதலைப் புலிகள் நிராகரித்துள்ளனர் என்று அமைச்சர் எஸ் தொண்டமான் தெரிவித்ததாகக் கொழும்பு நாளிதழ் ஒன்று நேற்றுத் தெரிவித்துள்ளது.

அமைச்சர் தொண்டமானுக்கு விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நீண்ட கடிதம் ஒன்றினை எழுதியுள்ளார் என்றும் தனக்கு இக்கடிதம் கடந்த வியாழக்கிழமை கிடைத்ததாக தொண்டமான் கூறியதாகவும் இச்செய்தி கூறுகிறது.

தான் தெரிவித்த சில யோசனைகளை அவர்கள் வரவேற்கிறார்கள்.

வேறு பல யோசனைகளை முற்று முழுதாக எதிர்க்கிறார்கள் என்றும் தெரிவித்த தொண்டமான் விவரங்களை வெளியிடமறுத்து விட்டார் என்றும் இச்செய்தியில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கரபந்தாட்ட நடுவர்கள் பயிற்சி முகாம்

யாழ். கரபந்தாட்ட சம்மேளனம் புதிய கரபந்தாட்ட நடுவர்களை உருவாக்கு முகமாக எதிர்வரும் 23-ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு சென்பற்றிக்ஸ் கல்லூரியில் சர்வதேச கரபந்தாட்ட விதிகள் தொடர்பான விரிவுரைகளையும் செய்கை முறைப் பயிற்சிகளையும் விரிவான அடிப்படையில் நடத்தவுள்ளது.

இது தொடர்பாக யாழ் கரபந்தாட்ட சம்மேளனத் தலைவர் கப்ரின் டீ.ஏ.எம். குணசிங்கம் கருத்துத் தெரிவிக்கையில் கரபந்தாட்டத்தில் ஆற்றலும், அனுபவமும் நிறைந்த வல்லுனர்களால் நடத்தப்படவுள்ள இந்த பயிற்சி வகுப்புகளில் எவரும் சேர்ந்து பயிற்சி பெறலாம். வயதெல்லை கிடையாது. பயிற்சி முடிவில் நடைபெறவுள்ள பரீட்சையில் சித்தியடைவோருக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும் என்று கூறினார்.

யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக நடைபெறவுள்ள இந்நிகழ்ச்சி சிறப்பாகவும், வெற்றிகரமாகவும் அமைவதற்கான சகல ஏற்பாடுகளையும், சம்மேளன உபதலைவர் எம்.கே இராசரெட்டினத்தின் அனுசரணையுடன், செயலாளர் கே. ஏகாம்பரம் செய்து வருகிறார். (16)

## தெருக்கூத்து

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி வடமராட்சிப் பகுதியில் கிராமம் கிராமமாக, வீதி வீதியாகத் தெருக்கூத்து நடத்தப்பட்டு வருகிறது.

வடமராட்சி விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினரால் நடத்தப்படும் இத் தெருக்கூத்தின்போது நாடகமும், கருத்தரங்குகளும் இடம் பெற்று வருகின்றன. (10)

## பனாமாவில் பாதுகாப்பு படைகள் உஷார் நிலையில்

பனாமாவில் அதிபர் இளர்மோ என்டேராவைப் பதவியிலிருந்து அகற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிய வந்ததையடுத்தும் பாதுகாப்புப்படைகள் முழு ஆயத்த நிலையில் வைக்கபட்டுள்ளன.

சில இரகசியக் குழுக்களின் சதியை முறியடிக்க இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## 26 பேர் காயம்

பஞ்சாப்பில் இரு இடங்களில் குண்டுகள் வெடித்ததில் 26 பேர் காயமுற்றனர்.

## கொழும்பு உணவுக் கடைகளில் சுகாதாரச் சீர்கேடு

கொழும்பு நகரில் உள்ள உணவுக் கடைகள், சிற்றுண்டிச்சாலைகள் ஆகியன சுகாதார முறைகளைக் கைக்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுகாதார முறைப்படி உணவுப் பொருள்கள் தயாரிக்கப்படவில்லை என்ற புகார்களையடுத்து மாநகர முதல்வர் ரடணசிறி ராஜபக்ஷ மேல்மாகாண முதலமைச்சர் சுசில் முனசிங்க உட்பட பல அதிகாரிகள் இக்கடைகளுக்கு திடீர் விஜயம் மேற்கொண்டனர்.

## 6 முக்கிய புள்ளிகளை கொலைசெய்யத் திட்டம்?

ஆறு முக்கிய புள்ளிகளைப் படுகொலை செய்யப்பட்டிருந்த திட்டம் வெளிவந்துள்ளதாக 'சண்டே ரைம்ஸ்' நேற்றுச் செயதி வெளியிட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கூட்டுப்படை நடவடிக்கைத் தளபதி, பொலிஸ் மாஅதிபர், விமானப் படைத் தளபதி பேரேறோரைக் கொலைசெய்யத் திட்டமிடப்பட்டிருந்ததாக இச் செய்தி கூறுகிறது

தேசிய புலனாய்வுப் பணியகம் இத் தகவலை வெளியிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## எதிர்க்கட்சி தலைவரின் கூற்றுக்கு கருணாநிதி மறுப்பு

காவிரி நீர்ப்பிரச்சினை தொடர்பாக மீண்டும் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும் என்று தான் கூறியதாக தமிழக எதிர்க்கட்சித் தலைவர் எஸ் ஆர் பாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளதை தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி மறுத்துள்ளார்.

காவிரி நீர்ப்பிரச்சினைக்கு நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை நிறைவேற்று முறையை தமிழக அரசு ஆராய வேண்டும் என்றும் அவர் கூறினார்.

இதனைவிட்டு நடுவர்மன்ற இடைக்கால உத்தரவை மறுபரிசீலனை செய்வதற்காக கர்நாடக முதலமைச்சருடன் தமிழக முதலமைச்சர் பேச்சு நடாத்த வேண்டும் என்று தி.மு.க எப்போதுமே ஏற்றுக்கொண்டது இல்லை என்றும் அவர் மேலும் சொன்னார்.

## விளையாட்டு மைதானம்

## சென்.பற்றிக்ஸ் அணி இனிங்ஸால் வென்றது

கல்லூரிகளின் வருடாந்த கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன சென்றவாரம் இடம் பெற்ற போட்டியொன்றில் சென்பற்றிக்ஸ் கல்லூரி கைந்தவரோதய அணியை இனிங்சால் தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்பற்றிக்ஸ் கல்லூரி தனது முதலாவது ஆட்டத்தில் 4 இலக்குகளை மாத்திரம் பறிகொடுத்து 171 ஓட்டங்களைப் பெற்றதுடன் தனது துடுப்பாட்டத்தை இடை நிறுத்திக் கொண்டது மக்சி 56, பிரசாத் 37, எக்பேட் 25 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது

கைந்தவரோதய அணி அதன் முதல் துடுப்பாட்டத்தில் 42 ஓட்டங்களை மாத்திரம் பெற்று ஆட்டம் இழந்தது. அதன் இரண்டாவது துடுப்பாட்டத்திலும் 49 ஓட்டங்களைப் பெற்று ஆட்டம் இழந்ததினால் தோல்வியைத் தழுவ வேண்டியதாயிற்று.

## வெற்றி தோல்வியின்றி முடிவு

சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் ரொன்லிக் கல்லூரி அணிக்குமிடையில் கடந்த வார இறுதியில் சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற கிரிக்கெட் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி 'டிறோவில்' முடிவடைந்தது.

சென் ஜோன்ஸ் அணி அதன் முதல் துடுப்பாட்டத்தில் சகல இலக்குகளையும் இழந்து 177 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எம் காண்டீபன் வெகு திறம்பட ஆடி ஆட்டம் இழக்காமல் 103 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

ரொன்லிக் கல்லூரி அதன் துடுப்பாட்டத்தில் சகல விக்கற்றுக்களையும் இழந்து 201 ஓட்டங்களைக் குவித்தது கே நாதன் 77, எஸ்.பாஸ்கரன் 31 ஓட்டங்களைப் பெற்றனர்

சென்.ஜோன்ஸ் அணி அதன் 2வது ஆட்டத்தில் 4 இலக்குகள் இழப்பிற்கு 86 ஓட்டங்களைப் பெற்று ஆடிக் கொண்டிருக்கையில் ஆட்டம் நிறுத்தப்பட்டது

சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிக்கு எஸ்.கே பரமலிங்கமும், ரொன்லிக் கல்லூரி அணிக்கு எம் சண்முகலிங்கமும் பயிற்றுனர்களாகக் கடமையாற்றுகிறார்கள். இவர்கள் இருவரும் முன்னை நாள் பிரசித்தி பெற்ற கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## சென்.ஜோசப் அணி வெற்றி

யாழ்.கோட்டக் கல்விப் பிரிவில் பாடசாலைகள் மத்தியில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டப் போட்டியில் கடந்த வாரம் சென் ஜோசப் பாடசாலையில் இடம்பெற்ற 15 வயதிற்குட்பட்டவர்கள் ஆட்டத்தில் சென் ஜோசப் பாடசாலை அணி அதனை [illegible] த்து ஆடிய சென். சான்ஸ் அணியை [illegible]க்கு பூஜ்ஜிய[illegible] கோல்கள் கணக்கில் தோற்கடித்தது.

இடபோ[illegible] ராக எஸ்.எஸ்.றோய் கடமையாற்றினார். (16)




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பல்கலைக்கழக அனுமதிகள் - 91/92ம் கல்வி ஆண்டு

1990 ஆகஸ்ட், 1991 ஏப்ரல் (விசேட பரீட்சை) இல் நடைபெற்ற க.பொ.த. (உயர் தரம்) பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்கள் தங்களது பரீட்சைப் பெறுபேறு, மொத்தப் புள்ளி போன்றவற்றின் ஆவணங்களுடன் நேரடியாகவந்து பல்கலைக்கழக அனுமதி விண்ணப்பப்படிவங்களை 1992 02. 18 ஆம் திகதி தொடக்கம் பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 92 2 21 ஆம் திகதி பி.ப 4 00 மணிக்கு முன்பு பல்கலைக்கழகத் தேர்வுகளும் அனுமதிகளும் கிளையில் ஒப்படைக்க வேண்டும்.

பதிவாளர்

1992, 02, 15

02032


## தற்போது பிறப்பிக்கப்பட்டுள்ளது ஓர் முக்கியமான ஊரடங்குச் சட்டமாம்

''எவ்வாறாயினும் தற்போது யாழ் குடாநாட்டில் பிறப்பிக்கப்பட்டுள்ளது ஓர் முக்கியமான ஊரடங்குச் சட்டம்'' என்று இராணுவ வட்டாரங்கள் கூறியதாக நேற்றுக் கொழும்பு நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டது

''ஊரடங்குச் சட்டத்துக்கான காரணத்தைத் தெரிவிக்க மேற்படி வட்டாரங்கள் மறுத்துவிட்டன'' என்றும் இச் செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## அமைச்சரின் கோரிக்கை

''தேநீர் அருந்துதல் உடல் நலத்திற்குச் சிறந்தது'' என்ற வசனம் தேயிலை பாக்கெட்டுகளின் மீது அச்சிடப்பட வேண்டும் என்று தோட்டத் தொழிற்றுறை அபிவிருத்தி அமைச்சர் ரூபா கருணதிலக தேயிலை வர்த்தகர்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

''இலங்கையின் தேயிலைத் தொழிற்றுறை இன்று 125 வருடத்தை நிறைவு செய்வது வரலாற்றின் ஒரு முக்கிய நிகழ்வு'' என்றும் அவர் சொன்னார். (22)

## 'தமிழ் விரோதப் போக்கினால் நிலைமை சிக்கலாகக் கூடாது'

'அமைச்சர் தொண்டமானுக்கு எதிராகப் பிரசாரம் மேற்கொள்வது போல தமிழ் மக்களுக்கு எதிராக இனவிரோத உணர்வு[illegible]த் தூண்டி நிலைமையை மேலும் சிக்கலாக்கக்கூடாது'

இவ்வாறு ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. வி.பி.கணேசன் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்

# ★ $2\frac{1}{2}$ லட்சம் படையினர் பாதுகாப்புப் பணியில்;

# எனினும் கொலைகள் நீடிப்பு

# பஞ்சாப்பில் பதற்றம் அதிகரிப்பு!

எதிர்வரும் 19 ஆம் திகதி நிகழும் பஞ்சாப்பில் தேர்தல்களைக் குழப்பும் பொருட்டு சீக்கிய தீவிரவாதிகள் பாரதிய ஜனதாக கட்சியைச் சேர்ந்த 5 அரசியல் ஊழியர்களைச் சுட்டுக் கொன்றனர். இச்சம்பவம் அமிர்தசரஸ் நகரில் இடம்பெற்றது.

கடந்த சில தினங்களில் தீவிரவாதிகள் 6 ஆசிரியர்களையும் சுட்டுக் கொன்றுள்ளனர். தேர்தல் வேலைகளை இவர்கள் கவனித்து வந்ததே இதற்குக் காரணம்.

வருகிற 22-ஆம் திகதி வரை மூடப்பட்டிருக்கும் பாடசாலைகளும், கல்லூரிகளும் வாக்களிப்பு நிலையங்களாகப் பயன்படுத்தப்படவுள்ளன. துருப்புக்களின் தற்காலிக உறைவிடங்களாகவும் அவை விளங்கும்.

தேர்தலின் போது பெருந்தொகையான ஆசிரியர்கள் தேர்தல் அதிகாரிகளாக திரட்டப்படுவது வழக்கம். ஆனால் தாங்கள் கொல்லப்படுவதால் இந்தக் கடமைகளை ஏற்க ஆசிரியர்கள் மறுத்துவருகிறார்கள்.

தேர்தலை பகிஷ்கரிக்கும்படி சீக்கியக் கோவில்களை நிர்வகிக்கும் ஷிரோமணி குருத்வார பிரபந்தர் கமிட்டி தீர்மானம் நிறைவேற்றி இருப்பதாய் அதன் தலைவர் குர்சரண்சிங்டோரா கூறினார்.

வேட்பாளர்கள் தொண்டர்கள் அரச ஊழியர்கள் ஆகியோர் மீது தாக்குதல்கள் நடத்தப்படுவதனைத் தடுக்கு முகமாக இங்கு இரண்டரை இலட்சத்துக்கும் அதிகமான பாதுகாப்புப் படையினர் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (18)

## குவைத்தில் இந்திய வெளியுறவு அமைச்சர்

இந்திய வெளியுறவு மந்திரி மாதவசிங் சோளங்கி இருநாள விஜயம் மேற்கொண்டு குவைத் பயணமாகியுள்ளார்.

அவர் அங்கு இருதரப்பு உறவு மற்றும் பிராந்திய நிலைமை பற்றிக் கலந்துரையாடுவார்.

## மாவிலைத் தத்திகளைக் கட்டுப்படுத்த பூச்சிநாசினி விசிறல்

மாமரங்களினது பூக்களைத் தாக்கும் மாவிலைத தத்திகளைக் கட்டுப்படுத்துவதற்காக இயந்திர தெளி கருவி மூலம் பூச்சிநாசினி விசிறும் பணியில், விவசாய ஆராய்ச்சிப் பகுதியின் உதவியுடன் தமிழீழ ஆய்வு நிறுவனம் ஈடுபடவுள்ளது.

மாவிலைத் தத்திகளினால் பாதிக்கப்பட்ட மாந்தோப்புகளுக்கும் மாமரங்களுள்ள வீடுகளுக்கும் நேரடியாகச் சென்று இயந்திர தெளி கருவி மூலம் குறைந்த கட்டணத்தில் மருந்து தெளிக்கும் சேவை வழங்கப்படவுள்ளது. பூச்சி நாசினியுடன் மாமரங்களைப் பூக்கச் செய்வதற்காக "ஓமோன்" களை மருந்துடன் கலந்து விசிறவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் மாவிலைத் தத்திகளின் பாதிப்பு மாம்பழங்களின் விளைவில் பெரிதும் தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அரச ஊழியர்களுக்கு மீண்டும் வேலை கிடைத்தது

மன்னாரி திரும்பியோரில் அரச ஊழியர்களுக்கு உத்தியோகங்கள் கிடைத்தன என்று கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் நேற்று தெரிவித்தன.

திருமலை ஊடாக மன்னாருக்கு 97 குடும்பங்களைச் சேர்ந்த அகதிகள் இந்தியாவிலிருந்து திரும்பியுள்ளனர்.

## கொழும்பு நாளிதழ் கூறுகிறது இஸ்ரேலிலிருந்து ஆயுதங்கள்?

இஸ்ரேலிலிருந்து விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டதற்கான ஆதாரங்கள் அவுஸ்திரேலியாவிலிருந்து வெளியாகியுள்ளன என்று கொழும்பு நாளிதழ் ஒன்று நேற்றுச் செய்தி வெளியிட்டுள்ளது.

சிட்னியில் செயற்படும் இலங்கைத் தமிழ் வர்த்தகர்கள் சிலர் கப்பல் மூலம் ஆயுதங்களை அனுப்பி வைப்பதற்குக் கடந்த வருடம் மூன்று தடவைகள் இஸ்ரேலுக்கு விஜயம் செய்தனர் என்றும் இச்செய்தி கூறுகிறது.

## மோசடிப் பயணம் பலிதமாகவில்லை; திரும்பினர்

நான்கு யாழ்ப்பாணத் தமிழர்கள் போலிக் கடவுச் சீட்டுக்களை வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் டுபாயிலிருந்து இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இவர்கள் இலங்கை இரகசியப் பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

பொலிஸாரின் தகவலின்படி இந்த நான்கு பேரும் ஆளுக்கு இரண்டு பாஸ்போட்டுக்களை வைத்திருந்தார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை கட்டுநாயக்க விமான நிலையத்தில் விமான நிலைய பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட இரு பெண்களுள் ஒருவர் திருகோணமலையைச் சேர்ந்தவர் என்றும் மற்றவர் மருதானையைச் சேர்ந்தவர் என்றும், குவைத்திற்குச் செல்ல இருந்த இவர்களிடமும் போலிக் கடவுச் சீட்டுக்களே இருந்தன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (16)

## அரசியல் சுயநலம் பற்றி ஜனாதிபதி பிரேமா பிரஸ்தாபம்

'1956-ஆம் ஆண்டுக்குப் பின்னர் சிலர் அரசியல் சுயநலம் கருதித் தவறிழைத்ததினாலேயே நாட்டில் பிரிவினைவாதம் தலை தூக்கியது' என்று ஸ்ரீலங்கா ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ வாரியப்பொலவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

'தங்கள் உரிமைகள் பறிக்கப்படுவதைக் கண்டும் தமது நலன்கள் பாதிப்புறுவதனைப் பார்த்தும் அவ்விதம் சிறுபான்மை இனம் சிந்திக்கத் தொடங்கியதில் வியப்பொன்றும் இல்லை' என்றும் அவர் கூறினார்.

'இவ் வருட முடிவுக்குள் வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்' என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

### அங்குரார்ப்பணம்

ஏழைகள், ஆதரவற்றோர், அனாதைகள், விதவைகள் ஆகியோருக்கு உதவி வழிபடுத்த இந்து சமயப் பேரவையால் உருவாக்கப்பட்டுள்ள 'இந்து சமய சமூக அபிவிருத்தி நிதியத்தின்' அங்குரார்ப்பண விழா எதிர்வரும் செவ்வாய்க் கிழமை முற்பகல் பத்து மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

## மன்னார் அகதிகளுடன் 20 இல் கப்பல் வருகின்றது

மன்னாருக்கு முதலாவது அகதிகளை ஏற்றிய கப்பல் எதிர்வரும் வியாழக்கிழமை ராமேஸ்வரத்திலிருந்து புறப்படும்.

மண்டபம் முகாமிலிருந்து 500 அகதிகள் இக்கப்பலில் அனுப்பப்படுவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## ★ தொண்டர் ஆசிரியர்; திட்டத்தை மீள் பரிசீலனை செய்யக் கோரிக்கை

"தொண்டர் ஆசிரியர்களை நிரந்தர ஆசிரியர் சேவையில் சேர்ப்பதற்கு அரசாங்கம் விதித்துள்ள நிபந்தனைகளை மீள் பரிசீலனை செய்ய வேண்டும்"

இவ்வாறு இ. தொ. கா. பொதுச் செயலாளரும், கைத்தொழில் ராஜாங்க அமைச்சருமான எம். எஸ். செல்லச்சாமி ஜனாதிபதிக்கு அனுப்பிய கடித மூலம் கோரியுள்ளார்.

---

அரசியல் அவதானிப்புகள்:

## சர்வகட்சி மாநாடுகளும் இனப்பிரச்சினைத் தீர்வும்

- எஸ். ஜி. எம்.

இலங்கை இனப் பிரச்சினைத் தீர்வுக்கு வட்டமேசை மாநாடு, சர்வகட்சி மாநாடு என்பன வழிவகுக்குமென 1950 இன் நடுப்பகுதியிலிருந்தே பலர் கூறி வந்துள்ளனர்.

1977 இல் ஆட்சிக்கு வந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அதன் தேர்தல் விஞ்ஞாபனத்துக்கு அமைவாகவும், அதன் வழமையான தந்திரோபாயத்துக்கு அமைவாகவும், 1977 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் இடம்பெற்ற வன்செயல் நடவடிக்கைகள் காரணமாகவும், இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும்பொருட்டு சர்வகட்சி மாநாட்டைக் கூட்டியது.

முக்கிய சிங்களக் கட்சிகள் அதை பகிஷ்கரித்தபோதும் அப்போது தமிழீழ மக்களைப் பிரதிநிதித்துவம் செய்த தமிழர் விடுதலைக் கூட்டணி அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் போன்ற தமிழர் கட்சிகளும் இந்த சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொண்டன.

1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தினைத் தொடர்ந்து சிறிலங்கா அரசியல் அமைப்புக்கான ஆறாவது திருத்தம் நிறைவேற்றப்பட்டதன் காரணமாகப் பதவி விலகும் வரை தமிழர் விடுதலைக் கூட்டணி இம்மாநாட்டில் கலந்து கொண்டது

ஆனால் இனப் பிரச்சினைத் தீர்வுக்கு உருப்படியான எதுவும் செய்யப்படவில்லை. தீர்வு எதுவும் முன்வைக்கப்படவில்லை வழமையான கால இழுத்தடிப்புக்கு மட்டுமே இது உதவியது.

பின்னர் 1984 ஜனவரி 10 ஆம் திகதி முதலும் சர்வகட்சி மாநாடு நடந்தது! ஆலோசனைகளும், கலந்தாலோசனைகளும் நடந்தது. அதிலும் பலன் எதுவுமே வெளிப்படவில்லை.

ஜெயவர்த்தனா சகாப்தம் முடிந்த பின்பு வந்த பிரேமதாசா அரசும் இனப்பிரச்சினைத் தீர்வுக்குச் சர்வகட்சி மாநாடு வழிவகுக்குமெனக் கூறியது.

அதனடிப்படையில் 1989 செப்டெம்பர் 13 ஆம் திகதி பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதி பிரேமதாசாவினால் சம்பிரதாய பூர்வமாக 'சர்வகட்சி மாநாடு' அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இதிலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஈ. எம். பி, மற்றும் நவலங்கா சமசமாஜக் கட்சி என்பன கலந்து கொள்ளவில்லை

மீண்டும் முக்கியமான அரசியற் கட்சிகள் கலந்து கொள்ளாத. ஆனால் அரசியலில் மக்கள் ஆதரவு பெறாத, மக்களால் நிராகரிக்கப்பட்ட பல 'கட்சிகள்' கலந்து கொண்ட 'சர்வகட்சி' மாநாடாக இது செயற்பட்டது.

பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்திலிருந்து ஜனாதிபதி செயலகத்திற்கு இம்மாநாடு இடம்மாறியது.

பங்குபற்றியவர்களுக்கு நல்ல வரவேற்பும், உபசரணையும் இருந்ததாகக் கூறப்பட்டது. ஆனால் உருப்படியான எந்தத் தீர்வும் உருவாக்கப்படவில்லை, பிரசாரங்கள் மட்டும் பிரமாதமாகவிருந்தன.

இனப்பிரச்சினையுடன் தொடர்பில்லாத சில விடயங்களையும், தமக்குள்ளே எழுந்த கருத்து மோதல்கள் பற்றியுமே பங்குபற்றியவர்கள் பேசினார்கள்.

ஜே. வி. பி. கிளர்ச்சியைக் கையாள்வதற்கு ஆதரவு திரட்டும் வகையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த சர்வகட்சி மாநாடு அந்த இயக்கம் ஓரளவு பலவீனப்படுத்தப்பட்டதும் மெல்ல மெல்ல செயலிழக்க ஆரம்பித்தது.

அரசின் தேவை முடிந்ததும் இதற்குத் தேவையில்லாது போய்விட்டது

தொடர்ந்தும் 'சர்வகட்சி மாநாடு' இழுத்தடிப்பு ஏற்கப்பட மாட்டாது எனக் கண்ட பிரேமதாசா அரசுக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மங்கள முனசிங்காவின் 'இனப் பிரச்சினைத் தீர்வுக்கு பாராளுமன்றத் தெரிவுக் குழு' நியமிக்கும் பிரேரணை கைகொடுத்தது.

உடனடியாகவே அந்தத் தீர்மானத்தைப் பற்றிக் கொண்ட அரசு 1991 செப்டெம்பரில் தெரிவுக் குழு நியமனத்தை ஏற்றுக் கொண்டதுடன் மங்கள முனசிங்காவையே அதன் தலைவராகவும் நியமித்தது.

வழமையாக நடைபெற்று வந்த சர்வகட்சி மாநாடு 1991 டிசம்பர் ஐந்தாம் திகதி கடைசியாக நடைபெற்றது ஜனாதிபதி பிரேமதாசாவும், அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீதும் கூட இதில் கலந்து கொண்டனர்.

பாராளுமன்றத் தெரிவுக் குழு நியமிக்கப்பட்டதால் இம்மாநாடு நடைபெறுவதில் அர்த்தமில்லையென நாசூக்காகக் கூறப்பட்டது.

அதன் பின்னர் சர்வகட்சி மாநாட்டு ஆலோசனைப் பத்திரங்கள் எல்லாம் சுருட்டிக் கட்டிப் பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு அனுப்பப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

ஆக சம்பிரதாயங்களோடு ஆரம்பித்துச் சுமார் பதின்மூன்று ஆண்டுகள் வரை ஏதோ ஒரு வகையில் செயற்பட்ட 'சர்வகட்சி மாநாடுகள்' எதையுமே சாதிக்காத நிலையில் சடங்குகளேதுமின்றி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

கால தாமதத்திற்கான ஒரு இயந்திரம் முடிவடைந்த இடத்திலிருந்து பாராளுமன்றத் தெரிவுக் குழு வென்ற இன்னுமொரு இயந்திரம் செயற்பட ஆரம்பித்திருக்கிறது.

உருவாக்கப்பட்டு ஐந்து மாதங்களாகியும் உருப்படியாக எதுவும் நடக்கவில்லை. நடைமுறைகளில்தான் இன்னும் கவனம் செலுத்தப்படுவது தெரிகிறது

— 04 ... ம் பார்க்க

## பிக்குவை விடுவிக்குமாறு அப்பில்நீதிமன்றம் உத்தரவு

பயங்கர ஆயுதங்கள் வைத்திருந்த குற்றச்சாட்டின் மீது கைதாகி தடுத்து வைக்கப்பட்ட பௌத்தபிக்குவை விடுவிக்குமாறு அப்பில் நீதிமன்ற நீதிபதி சீ, ஆனந்த இரேரோ உத்தரவிட்டார்.

கதிர்காமம் பகுதியில் உள்ள பௌத்த விகாரை ஒன்றில் இருந்து ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டது தொடர்பாக இந்தப்பிக்கு தடுத்துவைக்கப்பட்டிருந்தார்.

இப்பிக்குவின் ஆட்கொணர்வு மனு மீதான விசாரணையைத் தொடர்ந்து நீதிபதி இவ்வாறு உத்தரவிட்டார். 06

### பாட்டாளி மக்கள்கட்சித் தலைவர் சொல்கிறார்:

## 2 லட்சம் ஆதரவாளர்களை கைது செய்யவேண்டி வரும்

"இலங்கைத் தமிழ் மக்கள் மீதான எமது பற்றையோ குறிப்பாக புலிகளுக்கு தமிழ மக்கள் ஆதரவு தருவதையோ தமிழக முதல்வர் ஜெயலலிதா தடுத்திட முடியாது" என தமிழக பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் டாக்டர் ராமதாஸ் சேலத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

"நான் பகிரங்கமாகவே புலிகளை ஆதரிக்கிறேன் ஈழத் தமிழரின் இலட்சியத்திற்காக எதைச் செய்தாலும் சொன்னாலும் ஜெயலலிதா அரசு மக்களைச் கைது செய்யும் என்றால் இரண்டு லட்சம் தமிழக ஆதரவாளர்களையும் கைது செய்யவேண்டி வரும் என ராமதாஸ் அங்கு மேலும் தெரிவித்தார். 22

### ✶ தொண்டர் நிறுவனங்களுக்கான

## அவுஸ்திரேலியாவின் நிதியுதவி

## வடகிழக்கு அவசர தேவைகளுக்கு

அண்மையில் தொண்டர் நிறுவனங்களூடாக அவுஸ்திரேலிய அரசு அளித்த 300,000 அவுஸ்திரேலிய டொலர் நிதியுதவியின் ஒருபகுதியை சர்வதேச செஞ்சிலுவை சங்கம் வடகிழக்கில் அது மேற்கொள்ளும் அவசர புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம் அவுஸ்திரேலிய நிதியுதவியில் ஒருபகுதியை யூனிசெப் அவசர மருத்துவ பொருள்களை கொள்வனவு செய்ய பயன்படுத்தவுள்ளது.

குடாநாட்டிற்கான பாலுணவுப் பொருள்களை கப்பல் மூலம் தருவித்து விநியோகம் செய்யவும் இந்நிதியுதவியில் ஒரு பகுதி பயன்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது,

இவற்றுடன் கிழக்கில் மட்டக்களப்பு, திருமலை மாவட்டங்களில் இந்நிதியுதவி கொண்டு தமிழ் மக்களின் மீளக்குடியமர்த்தல் தற்காலிக வதிவிடங்களை அமைத்தல் போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளவுள்ளது.

## ஊரடங்கு குறித்த செய்தி சிங்களப்பத்திரிகைகளில் இல்லை

வடபகுதி மக்களின் பிரச்சினைகள் குறித்து லங்காதீப சிலுமின ஆகிய சிங்களப் பத்திரிகைகள் நேற்றுகட்டுரை வெளியிட்டுள்ளன

வடபகுதிகளின் கஷ்டநிலைமைகள் பற்றி தென்பகுதி மக்களில் அதிகமானோருக்கு எதுவும் தெரிவதில்லை எனவும் அப்பத்திரிகைகள் கூறுகின்றன

இதே நேரம் குடாநாட்டில் அமுலான ஊரடங்கு குறித்து சிங்களப்பத்திரிகைகளில் எதுவுமே பிரசுரிக்கப்படவில்லை.

## தனியார் பொருள்களுடன் பருத்தித்துறைக்கு கப்பல்

கொழும்பிலுள்ளவர்கள் வடபகுதியிலுள்ள தமது உறவினர்களுக்கு அனுப்பிய பொருள்களுடன் மிரினால் என்ற கப்பல் இம்முறை பருத்தித்துறை துறைமுகம் வரும் என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

முன்னர் இவ்வாறு வந்த பாரோஸ் என்ற கப்பல் பருத்தித்துறை துறைமுகம் செல்ல அனுமதிக்காத கூட்டுப்படை தலைமையகம் அக்கப்பலை படையினர் நிலைகொண்டுள்ள காங்கேசன்துறை துறைமுகத்துக்கு செல்ல பணித்திருந்தது.

இதனால் இப்பொருள்கள் உரியவருக்கு செல்லாமல் படையினர் வசமானது இங்கு குறிப்பிடத்தக்கது. 22

## உரிமைப்போர் வெற்றி பெற உழைப்பாளர்கள் திரளவேண்டும்

### -- தமிழீழ அரசியல் பொறுப்பாளர் மூர்த்தி

"ஈழம் வாழ் தமிழ்மக்கள் தமது இழந்த உரிமைகளை மீட்டெடுக்கவும், சுதந்திரமான சுபிட்சமானவாழ்வைக் காணவும் நடைபெற்று வரும் போராட்டத்திலே உழைக்கும் மக்கள் பங்கு கொண்டு வர்க்க பேதமின்றி ஓரணியில்திரண்டு உரிமைப் போர் வெற்றிபெற ஒத்துழைக்க வேண்டும்"

— இவ்வாறு தமிழீழ அரசியல் பொறுப்பாளர் மூர்த்தி கிராமிய உழைப்பாளர்களுக்கான பொதுக் கூட்டத்தின் போது பேசினார்.

கிராமிய உழைப்பாளர்களுக்கிடையே தொழிலாளர் அணியை ஏற்படுத்தும்நோக்கமாக உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலையில் நேற்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் "தேசவிடுதலைப் போராட்டத்தில் உழைப்பாளர்களின் பங்கு" எனும் தலைப்பில் பேசும் போதே திரு.மூர்த்தி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு ஏரம்பரநாதன் தலைமையில் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமான மேற்படி பொதுக்கூட்டத்தில், யாழ் மாவட்ட அரசியல் நிர்வாக உதவிப் பொறுப்பாளர் தங்கா. வலிகாமம் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் பக்கீன்.தொழிற்சங்க பிரிவுப் பொறுப்பாளர் சுந்தரராஜன் ஆகியோரும் பேசினர்

யாழ் மாவட்டத்தில் கிராமிய ரீதியில் தொழிலாளர்கள் அணியை அமைக்கும் நடவடிக்கைகளைக் கவனிப்பதற்கு முன்னோடியாக 11 பேரைக் கொண்ட தற்காலிக செயற்குழு ஒன்றும் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டது.

---

ஐ, எம், எப்....

வரை பூர்த்திசெய்யப்படாமையினால் முதல் தவணை நிதியுதவி வெட்டு விழலாம் என முரசொலி ஏற்கனவே செய்தி வெளியிட்டது நினைவிருக்கலாம்

---

வாக்கு—

ந்து இப்போது முருகன் என்ற சந்தேக நபரும் தாம் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டே வாக்குமூலம் பெறப்பட்டதாக மனு ஒன்றை சமர்ப்பித்துள்ளார்

எனது வாக்குமூலத்தை நீதிமன்றம் ஏற்கக்கூடாது அது நான் சித்திரவதை செய்யப்பட்டு பெறப்பட்டது என முருகன் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இவர்களைத் தவிர தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள நளினியின் தாயார் பத்மா, பேரறிவாளன் என்போரும் இவ்வாறான மனுக்களைச் சமர்ப்பித்துள்ளனர்.

எனினும் இவர்களின் இந்த மனுக்களை ஏற்கக்கூடாது எனவும் கைதாகி எட்டு மாதங்களின் பின்னரே இவர்கள் இவ்வாறான மனுக்களைச் சமர்ப்பிக்கின்றனர் இதை முன்னரே வெளியிட்டிருக்கலாமே எனப் புலனாய்வுக்குழு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்

இத்தகைய முறைப்பாடு மத்திய புலனாய்வுக்குழுவுக்கு எதிரான திட்டமிட்ட பிரசார முயற்சியாக இருக்கலாமா எனவும் இப்போது அந்த அதிகாரிகள் ஆராய்கின்றனராம்

சந்தேக நபர்களின் இந்தப் புதிய திருப்பம் பிணையில் விடுவிக்கப்பட்ட வழக்கறிஞர் வீரசேகரன் என்பவரது திட்டமாக இருக்கும் எனவும் புலனாய்வு அதிகாரிகள் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

சித்திரவதையினாலேயே தமது வாக்குமூலங்கள் பெறப்பட்டதாக சந்தேக நபர்கள் சமர்ப்பித்த மனு தொடர்பான தீர்ப்பை விசேட நீதிமன்றம் இவ்வாரம் வெளியிடவுள்ளது. (22)

## அறக்கட்டளை வைப்பாளர்கள் ஏமாற்றம்

இலங்கை வங்கியினால் 1981 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தேசிய அறக்கட்டளைத் திட்டத்தில் சேர்ந்த 110 000 வைப்பாளர்கள் வட்டி விகிதம் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளதையிட்டும் பெரும் ஏமாற்றம்அடைந்துள்ளனர்.

1981 இல் 22 சதவிகித வட்டி 1988 இல் 11 சதவிகித வட்டியாக குறைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் வயது வராதவர்களுக்கு Minors) மிகவும் சிறந்தது என்றும் ரூபா 25 மாதாந்தத் தவணையில் 21 மாதங்களுக்கு வைப்பிலிட்டால், அல்லது முழுமையாக ரூபா 600 வைப்பிலிட்டால் 21 வருடங்களுக்குப் பின்பு ரூ 39057 பெற முடியும் என்றும் இலங்கை வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆரம்பத்தில் கொடுக்கப்பட்ட 22 விகிதவட்டி கொடுக்கப்பட்டாலே இந்தத்தொகை பெற முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

---

அதிகாலை...

நகரில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் கன்னாதிட்டி வீதியில் நகைக்கடை ஒன்று முற்றாகச் சேதமடைந்தது மேலும் மூன்று கடைகளும் சேதமடைந்தன.

படையினரால்அதிகாலையில் ஏவப்பட்ட இருபதுக்கும் மேற்பட்ட ஷெல்களினால் யாழ் கரையோரப் பகுதியில்வசித்த பல பொதுமக்கள் பீதியுற்று வெளியேறியவண்ணம் இருந்தனர்.

இவர்கள் நகரின் கோவில்கள், தேவாலயங்கள், யாழ் மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவு ஆகியபகுதிகளில் தஞ்சமடைந்தனர்

(47-07-04-06-15)

---

கொழும்பு..

மட்டக்களப்பிலிருந்து ஏற்கனவே புலிகளின் அணியொன்று வந்து சேர்ந்து விட்டதாகவும் வடபகுதியிலிருந்து இன்னும் தாக்குதல் அணி செல்லவில்லை எனவும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

---

சர்வகட்சி மாநாடுகளும்.....

ஆக இந்தத் தெரிவுக்குழுவும் சர்வகட்சி மாநாட்டின் மறு பகுதியாக செயற்படுவதை உணர முடிகிறது.

உண்மையாக எதையாவது சாதிக்க இக்குழு விரும்பினால் நடைமுறைகளைத் தூக்கியெறிந்துவிட்டு சில நாள்கள் தொடர்ந்து ஆலோசனைகளை நடாத்தி தனது ஆலோசனையை அல்லது சிபாரிசுகளை மக்கள் முன்வைக்க வேண்டும் அப்படிச் செய்யாதவரை இதுவும் அர்த்தமற்ற குழுவாகவே அமையும்.

### வடமத்திய மாகாணசபையில் தீர்மானம்

## இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஐ. தே. க. உறுப்பினர் ஆதரவு

வடக்கு கிழக்கு பிரச்சினைக்கான சமரஸ தீர்வை ஜனாதிபதி பிரேமதாஸ காண வேண்டும் என வடமத்திய மாகாண சபையில் எதிர்க்கட்சி உறுப்பினர் கொண்டு வந்த தீர்மானத்திற்கு சபையில் உள்ள ஆளும் ஐ. தே. க உறுப்பினர்கள் முழு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய சோஷலிஸ முன்னணியைச் சேர்ந்த சோமசந்திர ராஜபக்ஸ கொண்டு வந்த தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய வடமத்திய மாகாணசபை முதலமைச்சரும் ஐ. தே க வைச் சேர்ந்தவருமான மகிந்தசோம, சபையின் அனைத்து ஐ தே க உறுப்பினர்களும் எதிர்க்கட்சி உறுப்பினரின் இத் தீர்மானத்தை முழுமையாக ஏற்றுக்கொள்ளுவதாக அறிவித்தார்.

### கம்பன் விழா

## உலகம் வாழ் தமிழர்களுக்கு உயர்ந்தபெருமைசேர்க்கிறது

"யாழ்ப்பாணமக்களுக்கு மட்டுமல்ல ஈழத்தில் வாழும் அனைத்துத் தமிழ் மக்களுக்கும் ஏன் உலகத் தமிழ் மக்களுக்கும் பெருமை சேர்க்கிறது கம்பன் விழா"

இவ்வாறு கம்பன் விழாவின் மூன்றாம் நாள் நிகழ்ச்சியின் போது நாடக அரங்கத் தொடக்க உரை நிகழ்த்திய பிரம்மஸ்ரீ ந வீரமணி ஐயர் பேசினார்.

அவர்மேலும் பேசுகையில் இராமாயணம் எங்கெங்கு உள்ளதோ அங்கெல்லாம் கம்பன் விழா எடுத்துச் சிறப்பிக்கப்பட வேண்டும்இராமாயணம் மக்கள் காவியம் மக்களுக்காகவே படைக்கப்பட்டது அக் காவ்யத்திலே சிவலிங்க பூஜை சிறப்பித்துச் சொல்லப்படுகிறது சிவலிங்க பூஜை ஏன் செய்ய வேண்டும்? சிவன் தீயவற்றை ஒழித்து நல்லவற்றை வாழவைக்கின்றார், அவர் உண்ட நஞ்சு அதனையே சுட்டிக்காட்டுகின்றது

அதேமாதிரி நஞ்சுடன் திரியும் போராளிகளின் தலைவர் பிரபாகரன் இத்தகைய விழா எடுப்பது தமிழரின் எழுச்சிக்கும் தமிழரின் கவிக்கும் தமிழரின் சிறப்புக்கும் சிறப்புச் சேர்க்கின்றது என வாழ்த்தியிருப்பது மட்டற்ற மகிழ்ச்சி தரும் சம்பவம் என்றார்.

இதனைத் தொடர்ந்து இளைஞர் கருத்தரங்கு நடைபெற்றது திரு. மா. வேதநாதன் தலைமையில் "காகுத்தன் பெருமைக்குக் கைகொடுத்தோர்" என்ற தலைப்பில் மாணவ மாணவிகள் கருத்துரை வழங்கினர்.

நாடக அரங்கில் நேருக்கு நேர் சந்திக்கும் பாத்திரங்களில் இராவணன் - விபூஷணன், வசிஷ்டர் - விசுவாமித்திரர், கும்பகர்ணன் - மாரீசன், வாலி - சுக்கிரீவன், இலக்குவன் - சூர்ப்பனகை ஆகிய பாத்திரங்களில் அறிஞர் பெருமக்கள் பங்கேற்றனர்.

---

திருமலை—

ரூபா என மதிப்பிடப்படுகிறது.

இதேவேளை திருமலை மாவட்டத்தில் கிளிவெட்டி, சம்பூர் பகுதிகளில் நேற்று படையினர் துப்பாக்கிச் சூடுகள் நடத்தியுள்ளனர் சேத விபரங்கள் தெரியவரவில்லை.

## விவசாயிகளுக்கு கடனுதவி

உரும்பராய வடக்கு கிராம முன்னேற்றச் சங்கம் ஏழை விவசாயிகளுக்கு வட்டியில்லாக் கடனுதவி வழங்கவுள்ளது.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்)லிமிற்றெட் ...வனத்தினரால் ...ல்விளங்காடு டச்சுவீதி 'லஷ்மிபில்டிங்'கில் ...ள அச்சகத்... ...92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது